भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरूवार, 9, जून 1994/1916 शाका

New Delhi, Thursday, 9th June, 1994/1916 Saga

*புது தில்லி, 1994, ஜூன் 9, வியாழக்கிழமை/1916 சக*


## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi

## சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

*(சட்டமியற்றுத் துறை)*

புது தில்லி

The translation in Tamil of the Judges (Protection) Act, 1985 (59 of 1985), The Indian Partnership Act, 1932 (9 of 1932), The Government Savings Bank Act, 1873 (5 of 1873), The Sale of Goods Act, 1930 (3 of 1930), The Public Provident Fund Act, 1968 (23 of 1968) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*நீதிபதிகள் (காப்பளிப்புச்) சட்டம், 1985 (59/1985), இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 (9/1932), அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873 (5/1873), சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 (3/1930), பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதியச் சட்டம், 1968 (23/1968) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[ Price Rs. 30-00

# அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873

(சட்ட எண் 5/1873)

[1873, சனவரி 28]

அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் தொடர்பான சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம்.

முகப்புரை. அரசாங்கச் சேமிப்பு வங்கிகளில் வைப்பீடுகள் செய்தல் தொடர்பான சட்டத்தைத் திருத்துவது உகந்ததாக இருப்பதால்,

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

## முன்னுரை

குறுந்தலைப்பு. 1. இதச் சட்டம், அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873 என்று வழங்கப்பெறும்.

அளாவுகை. இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

இந்தச் சட்டம் அஞ்சல் சேமிப்பு வங்கிகளிலுள்ள வைப்பீடுகளுக்குப் பொருந்துறுதல் ஆகாது. 2. இந்தச் சட்டம், திருவிதாங்கூர்-கொச்சி மாநில அஞ்சல் சேமிப்பு வங்கியில் செய்யப்பட்டுள்ள வைப்பீடுகள் எவற்றுக்கும் பொருந்துறுதல் ஆகாது; மற்றும், இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளது எவ்வாறிருப்பினும், பகுதி ஆ மாநிலங்கள் (சட்டங்கள் பற்றிய) சட்டம், 1951இன் தொடக்கநிலையை 3/1951. ஒட்டி முன்பு, மேற்சொன்ன மாநிலத்தில் அத்தகைய வைப்பீடுகள் தொடர்பாகச் செல்லாற்றலிலிருந்த சட்டம் எதுவும், அந்தச் சட்டம் நீக்கறவு செய்யப்படாதிருந்தாற்போன்றே, அதற்குத் தொடர்ந்து பொருந்துறுதல் ஆகும்.

பொருள்கோள் பிரிவு. 3. இந்தச் சட்டத்தில்,—

" வைப்பீட்டாளர் " என்பது, ஓர் அரசாங்கச் சேமிப்பு வங்கியில் தம்மால் அல்லது தம் சார்பில் இதற்குமுன் பணம் வைப்பீடுசெய்யப்பட்டுள்ள அல்லது இதன்பின்பு வைப்பீடுசெய்யப்பட வேண்டியதாகவுள்ள ஒருவர் என்று பொருள்படும் ; மற்றும், " வைப்பீடு " என்பது, அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட பணம் என்று பொருள்படும் ;

" செயலாளர் " என்பது, ஓர் அஞ்சலகச் சேமிப்பு வங்கியைப் பொறுத்த அளவில், அந்தச் சேமிப்பு வங்கி அமைந்துள்ள பகுதிக்காக அமர்த்தப்பட்டுள்ள அஞ்சல்துறைத் தலைவர் என்று, அல்லது அந்தப் பகுதி பாக்கிஸ்தானில் இருக்குமாயின், மைய அரசாங்கம் இதன்பொருட்டுப் பொது அல்லது தனி ஆணை வாயிலாக இந்தியாவிலுள்ள அத்தகைய பகுதிக்காகக் குறித்துரைக்கும் அஞ்சல்துறைத் தலைவர் என்று பொருள்படும் ;

" உரிமைவயதடையாதவர் " என்பது, இந்திய உரிமைவயதுச் சட்டம், 1875 இன்படி தமது உரிமைவயதை எய்தியிருப்பதாகக் கொள்ளப் 9/1875. படாத ஒருவர் என்று பொருள்படும்.

" வகுத்துரைக்கப்பட்ட " என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும் ;

## இறந்துபோனவர்களின் சொத்துக்களைச் சேர்ந்த வைப்பீடுகள்

வைப்பீட்டாளரால் செய்யப்படும் பெயர்குறிப்பிடுகை. 4. (1) நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அல்லது ஒரு வைப்பீட்டாளரால் தமது வைப்பீடு பொறுத்து விருப்புறுதி ஆவணம் வழியான அல்லது பிறவாறான அப்புடைவு எதிலும் அடங்கியுள்ளது எவ்வாறிருப்பினும், வகுத்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படும் பெயர்குறிப்பிடுகை எதுவும், அவ்வைப்பீட்டாளரின் இறப்பிற்குப் பின்பு அந்த வைப்பீட்டைப் பெறுவதற்கு ஒருவருக்கு உரிமை வழங்குவதாக இருக்குமிடத்து, அப்பெயர்குறிப்பிடுகை வகுத்துரைக்கப்பட்ட முறையில் மாறுதல் அல்லது அறவு செய்யப்பட்டாலன்றி, அவ்வாறு பெயர் குறிக்கப்பட்டவர் அவ்வைப்பீட்டாளரின் இறப்பிற்குப் பின்பு பிறர் அனைவரும் நீங்கலாக, அவ்வைப்பீட்டுத் தொகை செலுத்தப்படுவதற்கு உரிமைகொண்டவர் ஆவார்.